All Rights Reserved

## இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## இறுதி நிலைப் பரீட்சை – 2012 ஜனவரி

## (61) கணக்காய்வு

Auditing

22-01-2012
பிற்பகல்
[2.00 – 5.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

பக்கங்களின் எண்ணிக்கை: 04
வினாக்களின் எண்ணிக்கை : 06

*(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக*

*(2) **விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த மொழி மூலம் ஒரே மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*

*(3) கணிப்பான்கள் பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*(4) சகல செயல்முறைகளும் கணிப்புக்களையும் முன்வைக்க. உங்களால் மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் ஏதுமிருப்பின் தெளிவாகக் குறிப்பிடுக.*

*(5) மொத்தம் 100 புள்ளிகள்.*

---

**01.** (a) கணக்காய்வின் பிரதான குறிக்கோள் என்ன ? (02 புள்ளிகள்)

(b) இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் அங்கத்தினரின் தொழில்சார் பொறுப்புக்களை நிர்ணயிக்கும் அடிப்படை ஒழுக்கநெறிக் கொள்கைகள் நான்கினைக் (04) கூறி சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(c) “தாம் கணக்காய்வு செய்யும் நிதிக்கூற்றுக்கள் குறித்து கணக்காய்வாரள் ஒருவர் முழுமையான உத்தரவாதத்தைத் தரமாட்டார்.” தம்மால் கணக்காய்வு செய்யப்படும் நிதிக்கூற்றுக்கள் குறித்து ஏன் அவரால் முழுமையான உத்தரவாதத்தைத் தர முடியாது என்பதற்கான காரணங்கள் நான்கினைக் (04) கூறுக. (04 புள்ளிகள்)

(d) உள்ளகக் கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நான்கினைக் (04) கூறி சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(e) இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் (Monitoring Board) அதிகாரங்கள் இரண்டினைக் (02) கூறுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

**02.** (a) இலத்திரனியல் தரவு நிரைப்படுத்தும் முறைமையின் (Electronic Data processing system) கீழ் ஏன் பிரயோகக் கட்டுப்பாடுகள் அமைக்கப்பட வேண்டுமென சுருக்கமாக விபரிக்குக. (02 புள்ளிகள்)

(b) கணினிமயமாக்கப்பட்ட தகவல் முறைமையின் கீழ் தாபிக்கத்தக்கதான மூன்று (03) பிரயோகக் கட்டுப்பாடுகளை, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் கூறுக. (03 புள்ளிகள்)

(c) பின்வருவனவற்றால் நீர் விளங்கிக்கொள்வது என்னவென்பதை சுருக்கமாக விபரிக்குக.

(i) கட்டுப்பாட்டு இடர் (Control Risk)

(ii) கண்டுபிடிக்கும் இடர் (Detection Risk) (04 புள்ளிகள்)

(d) வ/வு சிக்மா (தனியார்) கம்பனி இரத்மலானையில் உள்ள தனது காரியாலயத்தின் ஊடாக குளிரூட்டிகளை இறக்குமதி செய்து விற்பனை செய்கிறது. குளிரூட்டிகள் காசுக்கும் கடனுக்கும் என இருவிதமாக விற்பனை செய்யப்படுகின்றன. வுாடிக்கையாளர்கள் தமது கட்டளைகளை களஞ்சியப் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க அவர் அதற்கான காசினை அல்லது காசோலைகளைப் பெற்றுக் கொண்டு விற்பனைப் பட்டியலைத் தயாரித்து பற்றுச்சீட்டினைக் கொடுப்பார். பாதுகாப்பு உத்தியோகத்தர் விற்பனைப் பட்டியலிலுள்ள / பற்றுச்சீட்டிலுள்ள விபரங்களை வாடிக்கையாளருக்குக் கொடுக்கப்பட்ட பொருட்களுடன் ஒத்திருக்கிறதா என சரிபார்ப்பார். குளிரூட்டிகளைக் கடன் அடிப்படையில் வாங்கிய வாடிக்கையாளர்கள் அதற்கான காசினை அல்லது காசோலைகளை கடன் தவணை முடிவினுள் உதவிக் கணக்காளரிடம் கொடுப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. நாள் முடிவில் உதவிக் கணக்காளர் அனைத்து விற்பனைப் பட்டியல்களையும் பற்றுச்சீட்டுக்களையும் பெற்ற காசினையும் கணக்கில் எடுத்து விற்பனைச் சாராம்சம் ஒன்றினைத் தயாரித்து பெற்றுக்கொண்ட காசினை அடுத்த வேலை செய்யும் நாளில் வங்கியில் வைப்பிலிடுவார். உதவிக் கணக்காளர் காசுப் புத்தகத்தை நாளதுவரை சரிசெய்து வங்கி கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பார்.

(i) மேற்கூறப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையில் காணப்படும் மிக முக்கியமான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மூன்றினை (03) இனங்காண்க. (03 புள்ளிகள்)

(ii) இப்பலவீனங்களை நிவர்த்தி செய்து வலுவானதொரு உள்ளகக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைமையை எவ்வாறு உருவாக்கலாம் என விபரிக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

**03.** (a) கணக்காய்வுச் சான்றுகளை (audit evidence) பெறும் முகமாக ஒரு கணக்காய்வாரள் மேற்கொள்ள வேண்டிய நான்கு (04) கணக்காய்வுக் காரிய விதிமுறைகளைக் (audit procedures) கூறி அவற்றைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(b) ஒரு பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஒன்றால் மேற்கொள்ளப்படும் தரக்கட்டுப்பாட்டு கொள்கைகளின் நோக்கங்கள் நான்கினை (04) பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(c) தரு **PLC** கம்பனியின் 2011 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யும் குழுவின் அங்கத்தினராக நீங்கள் இருக்கிறீர்கள். ஆதனம், பொறி, உபகரணங்கள் ஆகியவற்றை பரீட்சிக்குமாறு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள். உங்களின் பரீட்சிப்பின்போது கம்பனிக்குச் சொந்தமான கட்டிடமொன்று 2010/11 நிதியாண்டின்போது மீள்மதிப்பு செய்யப்பட்டு ரூ.100 மில்லியன் மீள்மதித்தல் மிகையாகக் காணப்பட்டது. இத்தொகையானது கம்பனியின் கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டது.

இந்தக் கட்டிட மீள்மதித்தல் மிகை தொடர்பான ஆவணங்களின் நிறை தன்மையையும் வழுவாநிலைமையையும் உறுதிசெய்துகொள்ள நீங்கள் கருத வேண்டிய நான்கு (04) விடயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(d) வ/வு ரண்முத்து (தனியார்) கம்பனியின் வருமானக் கூற்றுக்களை கணக்காய்வு செய்யும் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தினராக நீங்கள் இருக்கிறீர்கள். உங்களின் சிரேஷ்ட அதிகாரி வியாபார கொடுமதிகளைப் பரீட்சிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறார்.

2011 மார்ச் 31 ஆம் திகதி நிலுவையில் உள்ள வியாபார கொடுமதிகளை பரீட்சிக்கும் பொருட்டு (verify) நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய ஐந்து (05) கணக்காய்வு நடைமுறைகளைப் பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 17 புள்ளிகள்)

**04.** (a) கணக்காய்வு அத்தாட்சிகளைப் பெறுவதற்காக சம்பளங்களையும் கூலிகளையும் பரீட்சித்தல் செய்யும்போது பின்வருவனவற்றை வலியுறுத்துவதற்கு நீங்கள் கைக்கொள்ளும் கணக்காய்வு ஒழுங்குமுறைகளைக் கூறுக. (audit procedure)

(i) நிகழ்வு (Occurrence)

(ii) முழுமை (Completeness)

(iii) வழுவாநிலை (Accuracy)

(iv) துண்டிப்பு (Cut off) (04 புள்ளிகள்)

(b) வ/வு எக்ஸ்வைஇசட் கம்பனியின் பதிவேடுகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ள 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான தகவல்கள் பின்வருமாறு.

| | ரூபா. (மில்லியன்) |
|---|---|
| வங்கிக் கடன் | 20 |
| நிலையான வைப்புகள் | 5 |
| பரிப்புகளுக்கான ஏற்பாடு (Provision for contingent liabilities) | 6 |

மேற்கூறிய ஒவ்வொரு மீதியையும் அறுதியீடு செய்யும்பொருட்டு கணக்காய்வாளர் ஒருவர் மேற்கொள்ள வேண்டிய இவ்விரண்டு (02) வலுவளிப்பு விதிமுறைகளைத் தருக. (06 புள்ளிகள்)

(c) "போதுமானதும் பொருத்தமானதுமான ஏனைய கணக்காய்வுச் சான்றுகள் இருப்பதற்குச் சாத்தியமில்லை என்று கணக்காய்வாளர் சாதாரணமாக எதிர்பார்க்குமிடத்து வருமானக்கூற்றுக்களின் பொருண்மை விடயங்கள் குறித்து முகாமையிடமிருந்து எழுத்து மூலமான பிரதிநிதித்துவத்தை (written representation) கணக்காய்வாளர் பெற்றுக்கொள்ள வேண்டிய கடப்பாடு உடையவர்"

நிறுவனம் ஒன்றின் முகாமைத்துவத்திடமிருந்து பெறப்படும் முகாமைத்துவப் பிரதிநிதித்துவத்தில் பொதுவாக அடங்கியிருக்கும் நான்கு (04) விடயங்களை பட்டியலிடுமாறு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 14 புள்ளிகள்)

**05.** (a) கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களின் வியாபாரம் உள்ளகக் கட்டுப்பாடு என்பவை பற்றிய பொதுவான அறிவைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கணக்காய்வாளர் மேற்கொள்ள வேண்டிய நான்கு (04) கணக்காய்வுக் காரிய விதிமுறைகளைக் (audit procedures) கூறுக. (04 புள்ளிகள்)

(b) கணக்காய்வாளர் ஒருவர் முனைப்பழி அபிப்பிராயம் ஒன்றை (qualified opinion) எவ்வாறான சந்தர்ப்பங்களில் வழிமொழியலாம் எனச் சுருக்கமாக விபரிக்குக.(04 புள்ளிகள்)

(c) 2011 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வ/வு சுப்பர்லைட் (தனி) கம்பனியின் இறுதிச் சரக்கிருப்பினை (தொக்கு) கணக்கெடுக்கும் குழுவின் அங்கத்தினர் ஒருவராக நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களின் பின்வரும் அவதானிப்புகள், வேலைத்தாள்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

| **உருப்படிகள்** | **அளக்கும் அலகு** | **தொக்குப் பேரேட்டின்படி மீதி** | **காணப்பட்ட மீதி** | **மிகை (குறைபாடு)** | **குறிப்புகள்** |
|---|---|---|---|---|---|
| சுப்பர்லைட் சவர்க்காரம் (100 g) | பெட்டிகள் | 1,100 | 1,100 | - | இவை விற்கப்பட முடியாத உருப்படிகளாக இனங்காணப்பட்டவை. 2008 ஆம் ஆண்டிலிருந்து இவை விற்கப்படவில்லை. |
| சுப்பர்லைட் சவர்க்காரம் (200 g) | பெட்டிகள் | 500 | 600 | 100 | - |
| சுப்பர்லைட் பற்பசை (100 g) | பெட்டிகள் | 500 | 600 | 100 | 100 பெட்டிகளில் உள்ள பற்பசைகள் காலாவதியாகியவை. இவை ஏனைய தொனுதிகளில் இருந்து பிரிக்கப்பட்டு புறம்பாக வைக்கப்பட்டுள்ளன. |
| சுப்பர்லைட் பற்பசை (200 g) | பெட்டிகள் | 850 | 850 | - | - |
| சுப்பர்லைட் பற்பசை குழந்தை கிறீம் (150 g) | பெட்டிகள் | 500 | 100 | (400) | - |

மேற்கூறிய தகவல்களிலிருந்து கணக்காய்வின்போது விசேட கவனம் செலுத்த வேண்டிய நான்கு (04) கணக்காய்வு விடயங்களை அடையாளம் காணுமாறு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள். (06 புள்ளிகள்)

(மொத்தம் 14 புள்ளிகள்)

**06.** (a) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் ஒரு கம்பனியின் முதலாவது கணக்காய்வாளரது நியமனம் எவ்வாறு நிகழ்த்தப்படும் என்பதனை சுருக்கமாக விபரிக்குக. (03 புள்ளிகள்)

(b) கம்பனிச் சட்டத்தின் 157(3) ஆம் பிரிவின்கீழ் ஒரு கம்பனியின் கணக்காய்வாளராக நியமிக்கப்பட முடியாத மூன்று (03) ஆட்களைக் கூறுக. (03 புள்ளிகள்)

(c) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 163 ஆம் பிரிவின்கீழ் பங்குதாரர்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு அறிக்கையில் கணக்காய்வாளர் அடக்க வேண்டிய விடயங்கள் மூன்றினைக் (03) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(d) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கணக்காய்வாளருக்கு உரித்தான உரிமைகள் அல்லது அதிகாரங்கள் மூன்றினைப் (03) பட்டியலிடுக. (03 புள்ளிகள்)

(e) 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கணக்காய்வாளர் அதிபதியின் மூன்று (03) கடமைகள் அல்லது பணிகளைப் பட்டியலிடுக. (03 புள்ளிகள்)

(f) (i) பொது நிறுவனங்களிற்கான ஆணைக்குழு (Committee on Public Enterprises (COPE) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது என்ன ?

(ii) பொது நிறுவனங்களிற்கான ஆணைக்குழுவினது இரு (02) பணிகளைப் பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 19 புள்ளிகள்)

- o0o -